கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்

மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்

அவ.எண். 231/15

2019 ம் ஆண்டு 23.07.2019 பிவாசா.3

சாட்சியின் சாட்சியம் திரு.பி.கருணாநிதி , பி.எ.பில்., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நடராஜன் | தொழில் | |
| த/பெ | சுப்பையமுதலியார் | கிராமம் | |
| வயது | | தாலுகா | |
| ஜாதி | | மாவட்டம் | |
| சமயம் | | | |

குறுக்கு விசாரணை வாதி தரப்பில்

சத்தியமாக சொல்கிறேன். எனது பிரமாண வாக்குமூலத்தை தயாரிக்க திரு.ரமணி வழக்கறிஞருக்கு நான்தான் விவரங்கள் சொன்னேன். பிவாசாஆ.2 ல் கண்டுள்ள சொத்தை நான் சுப்பராயலு என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினேன். அந்த கிரைய சொத்து சுப்பராயலு என்பவருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்டது என சொல்லி பிவாசாஆ.2 ல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுப்பராயலு தந்தை பெயர் சடகோபால் நாயுடு ஆகும். சடகோபால் நாயுடுவிற்கு எத்தனை குழந்தைகள் என்பது எனக்கு தெரியாது. சுப்பராயலு என்பவருடன் உடன் பிறந்தவர்கள் யார் யார் என்றால் கலாவதி என்பவர் இருப்பது தெரியும் வேறு யாரும் உள்ளார்களா என்பது எனக்கு தெரியாது. பிவாசாஆ.2 ல் கண்டுள்ள சொத்தை நான் கிரையம் பெறும்போது சடகோபால் நாயுடுவின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று ஆகியவற்றை நான் வாங்கி பார்க்கவில்லை. கிரையம் பெறுவது குறித்து வழக்கறிஞரிடம் கருத்து எதுவும் பெறவில்லை. நான் கிரையம் பெற்ற சொத்தானது சடகோபால் நாயுடுவின் வாரிசுகள் அனைவருக்கும் உரிமையுள்ள சொத்து என்றாலும் அதை நான் சுப்பராயலுவிடம் மட்டும் இருந்து கிரையம் பெற்றுள்ளதால் அந்த கிரையம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.நான் பெற்ற கிரைய பத்திரத்தில் கிரைய சொத்தின் சர்வே எண் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதற்கு பிழைதிருத்தம் செய்து பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிழைதிருத்தம் 2 ஆண்டுகள் கழித்து செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் பெற்ற கிரைய சொத்தின் நகர சர்வேஎண். 1163/1 என்பது தவறானது என்றும் 710/1 சி என்பது தான் சரியானது என்றும் பிழைதிருத்தம் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பிழைதிருத்தம் பத்திரம் பதிவு செய்த போதாவது சுப்பராயலுடன் பிறந்த சகோதர சகோதரிகள் உள்ளனரா என தெரிந்து கொண்டீர்களா என்றால் 2 சகோதரிகள் இருப்பதாக தெரிந்து கொண்டேன்.

மற்றவர்களை பற்றி தெரியாது. அந்த இரண்டு பேரிடமாவது கிரைய ஆவணத்தில் கையெழுத்து பெற்றீர்களா என்றால் அவர்கள் உள்ளூரில் இல்லாததால் வாங்கவில்லை. அந்த பிழைதிருத்தம் பத்திரம் பிவாசாஆ.3ல் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கையெழுத்து பெறாததால் அந்த ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிவாசாஆ.2 முதல் 6 வரையான ஆவணங்கள் எந்த வகையிலும் தாவா சொத்தின் மீதான வாதியின் உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு சுப்பராயலு உடன் பிறந்தவர்கள் யார் யார் என்பதை நான் தெரிந்து கொண்டேன். வாதி ஜெயக்குமார் என்பவர் சுப்பராயலுவின் ஒரு தங்கையான சுசீலாவின் மகன் என்றால் சரிதான். வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மரபுவழி வரைபடத்திலுள்ள விவரங்களை நான் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. அதே போல் வழக்குரையில் உள்ள விவரங்களையும் நான் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரங்களையும் நான் தெரிந்து கொள்ளவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் எனது மகன்கள் மூலம் ஓரளவு தெரிந்து கொண்டேன். தாவா சொத்தை தக்க வைத்து கொள்ள வேண்டி பொய்யான தகவல் கொடுத்து பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதியும் அவரது பெற்றோர்களும் வெளியூரில் வசிப்பதை தெரிந்து கொண்டே தாவா சொத்தில் அவர்களுக்கு உரிமை இருப்பது தெரிந்து கொண்டே மேற்படி சுப்பராயலுவிடம் நான் கூட்டு சேர்ந்து குறைந்த விலைக்கு தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வேறு பகுதிகளை வேறு நபர்களும் வாங்கியுள்ளார்கள். அவர்கள் தான் 7 முதல் 16 பிரதிவாதிகள் ஆவர் என்றால் சரிதான். 7 முதல் 16 பிரதிவாதிகள் கிரைய ஆவணங்களை நான் வாங்கி பார்த்தேன். அந்த ஆவணங்களிலும் மேற்படி கிரைய சொத்து 1ம் பிரதிவாதிக்கு பூர்விகமாக பாத்தியபட்டதாக தான் சொல்லப்பட்டுள்ளது. இந்த வழக்கிற்கு பிறகாவது நான் கிரையம் பெற்ற சொத்து மேற்படி கிரையப்படி எனக்கு பாத்தியபட்டது என விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு எதுவும் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. பிவாசாஆ.2 மற்றும் 3ன் படி நான் பெற்ற கிரையம் மற்றும் பிழைதிருத்தம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில்

பிவாசாஆ.2 மற்றும் 3ன் படி நான் கிரையம் பெறுவதற்கு முன்னால் கிரையச் சொத்தின் மூல ஆவணங்களை பார்வையிட்ட பிறகு தான் நான் கிரையம் பெற்றேன். நான் விசாரித்த வகையில் நான் கிரையம் பெற்ற சொத்து 1ம் பிரதிவாதி சுப்பராயலுவுக்கு தனித்து பாத்தியபட்டது என தெரிந்து தான் நான் அவரிடம் கிரையம் பெற்றேன். மேற்படி கிரைய சமயத்தில் 3ம் பிரதிவாதி கலாவதி நான் கிரையம் பெற்ற சொத்திற்கு எதிரே தான் வசித்தார். அப்போது கலாவதியிடம் நான் எதுவும் கேட்கவில்லை. ஆனால் நான் கிரையம் பெற்ற விவரம் கலாவதிக்கு நன்றாக தெரியும். நான் கிரையம் வாங்கிய போதும் அந்த கிரைய சொத்தில் நான் வீடு கட்டிய போதும் அதற்கு பிறகும் இதுவரை 3ம் பிரதிவாதி எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை. 1ம் பிரதிவாதியின் இன்னொரு

சகோதரி சுசீலா அதாவது வாதியின் தாயாரை எனக்கு தெரியாது. வாதியை நான் இந்த நீதிமன்றத்திற்கு வந்த போது தான் பார்த்தேன் . அதற்கு முன் பார்த்ததில்லை. நான் கிரைய வாங்கியபோதும் அதன் பின்னிட்டும் வாதி நேரில் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை. நான் கிரையம் பெற்றதிலிருந்து இரண்டு ஆண்டுகள் கழித்து அதில் வீடு கட்டினேன். என்னை போலவே இன்னும் 4 அல்லது 5 பேர் 1ம்பிரதிவாதியிடம் கிரையம் பெற்று அந்த சொத்தில் வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள். 1ம் பிரதிவாதி கடந்த 4 ஆண்டுகளாக உடல்நிலை சரியில்லாத நிலையில் படுத்த படுக்கையாக உள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அவருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்தை தான் பிவாசாஆ.2 மற்றும் 3 ன் மூலம் எனக்கு கிரையம் கொடுத்தார் என்றாலும் அது செல்லத்தக்கது என்றாலும் சரிதான்.

குறுக்கு விசாரணை 3ம் பிரதிவாதி தரப்பில்

தாவா சொத்தில் எனக்கு பாத்தியபட்ட பகுதியை நான் கிரையம் பெறுவதற்கு முன்பு தாவா சொத்திற்கான 12 ஆண்டிற்கான வில்லங்க சான்றை நான் வாங்கி பார்த்தேனா என்றால் 15 ஆண்டிற்கான வில்லங்க சான்றை வாங்கி பார்த்தேன். அந்த வில்லங்க சான்றை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் பார்த்த வகையில் மேற்படி வில்லங்க சான்றில் அதில் கண்ட சொத்து சுப்பராயலுவுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என தெரிந்ததால் தான் நான் கிரையம் பெற்றேன். உண்மையில் நான் வில்லங்க சான்று வாங்கி பார்க்கவில்லை என்றாலும் அதில் சுப்பராயலுவுக்கு மட்டுமே பாத்தியபட்டது என பொய்யாக சொல்லப்பட்டுள்ளதாக நான் சொல்வது பொய்யானது என்றாலும் அதனால் தான் அந்த வில்லங்கசான்றை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 3ம் பிரதிவாதி கலாவதியை மதுரைக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள் ஆனால் நான் கிரையம் வாங்கிய போது அவர் எனது வீட்டிற்கு எதிரே குடி வந்து விட்டார். 1992ம் ஆண்டு வரை 3ம் பிரதிவாதி தனது குடும்பத்தாருடன் மதுரையில் வசித்தார் என்றாலும் நான் சொல்வது போல் எனது வீட்டிற்கு எதிரே குடிவரவில்லை என்றாலும் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய போதிலிருந்து 3ம் பிரதிவாதி தாராபுரத்தில் தான் வசித்தார் என்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் கலாவதி நான் கிரையம் பெற்ற தேதியில் தாராபுரத்தில் வசித்து வந்திருந்தால் கிரைய ஆவணத்தில் பூர்விக சொத்து என சொல்லியுள்ள நிலையில் நான் அவரிடமும் கையெழுத்து பெற்றிருப்பேன் என்றாலும் அப்போது அவர் தாராபுரத்தில் வசிக்காததால் தான் நான் அவரிடம் கையெழுத்து பெறவில்லை என்றாலும் சரியல்ல. நான் பெற்றது மோசடி கிரையம் என்றாலும் அது குறித்து 3ம் பிரதிவாதிக்கு அப்போது தெரியாது என்றாலும் சரியல்ல. 3ம் பிரதிவாதி பங்கை மறைத்து நான் கிரையம் பெற்றுள்ளதால் இந்த கிரையம் 3ம் பிரதிவாதியை கட்டுப்படுத்ததாது என்றால் சரியல்ல. அதனால் 3ம் பிரதிவாதிக்கு சேரவேண்டிய பாகத்தை கொடுப்பது குறித்து நான் எந்த ஆட்சேபணையும் சொல்லமுடியாது என்றால் சரியல்ல.

3ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணை 4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

குறுக்கு விசாரணை 16ம் பிரதிவாதி தரப்பில்

நான் கிரையம் வாங்கிய சமயத்தில் என்னுடன் சேர்ந்து சுமார் 6 மற்றும் 7 பேர்கள் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் 16ம் பிரதிவாதியான ஈஸ்வரி என்பவரும் அப்போது தான் கிரையம் பெற்றார். அவர் சுமார் 10 லட்சம் செலவு செய்து வீடு கட்டியிருப்பாரா என்றால் அதை விட அதிகமாக செலவு செய்து தான் வீடு கட்டியுள்ளார். நான் எனது கிரைய சொத்தில் வீடு கட்டிய போதும் மேற்படி ஈஸ்வரி வீடு கட்டிய போதும் யாரும் வந்து எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை. எங்களது வீடுகள் உள்ள சொத்தில் பாத்தியதை குறித்து யாரும் வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் நேர்முக கடிதங்கள் எதுவும் அனுப்பவில்லை. நான் வசிக்கும் வீட்டிற்கு வீடு கட்டியதிலிருந்து தண்ணீர்வரி மின்சாரவரி மற்றும் வீட்டுவரி போன்றவை செலுத்தி அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்சொன்ன கிரையச் சொத்துகள் தவிர்த்து விற்கப்படாத
காலி இடங்கள் இன்னும் சுப்பராயலு வசம் உள்ளது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி எனது வீட்டிற்கு எதிரே சுமார் 35 ஆண்டுகளாக வசிக்கிறார். அவரும் இதுவரை ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை.

பிரதிவாதிகள் 6 , 7 , 9 , 11 , 12 , 15 , 17 மற்றும் 18 தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை தெரிவிக்கப்பட்டது.